27.01.2025

அ.வ.எண். 192/2017

வாசா.1 - மருதக்குட்டி

<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் பிரதிவாதிகளுடன் ஏற்பட்ட பிரச்சனையால் தாக்கல் செய்தேன். நான் 2 வதாக எனது வழக்குரையை என்ன காரணத்திற்காக திருத்தம் செய்தேன் என்றால் பூசுவதற்கு அவர்கள் வழிவிடாததால் வழி கேட்டு தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை, பிரமாண வாக்குமூலம், கூடுதல் வழக்குரை ஆகியவை நான் சொன்ன தகவலின் அடிப்படையில் தான் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு சொத்து குடித்துரையில் உள்ளதாக நான் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். வழக்கு சொத்தை அளவீடு செய்யும்போது நானும், என் தரப்பு வழக்கறிஞரும் அங்கு இருந்தோம்.

இந்த வழக்கு சொத்து இரண்டு அயிட்டங்களாக உள்ளது என்றால் ஆமாம். நான் கேட்கும் பூசுவதற்கான வழி எந்த சொத்தில் உள்ளது என்றால் 1 வது அயிட்ட சொத்தில் உள்ளது. என்னுடைய முன்னோர்கள் சொத்து எப்படி வந்தது என காட்ட நான் கிரய பத்திரமும், அடமான பத்திரமும் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணம் பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ-1 ஆவணம் அடமான கடன் பத்திரம் என்று எங்கு எழுதியுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு அடமானம் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார். வா.சா.ஆ.1 ஆவணம் என்னுடைய தகப்பனார் கையொப்பம் உள்ளது, யார் யாருக்கு எழுதி கொடுத்த ஆவணம் என்றால் நஞ்சப்ப கவுண்டர் அய்யா கவுண்டருக்கு எழுதி கொடுத்த ஆவணம் என் தகப்பனார் பெயர் அய்யா கவுண்டர். நஞ்சப்ப கவுண்டரின் கையொப்பம் இல்லை.

என்னுடைய ஆவணத்தின் படி தென்வடல் 24 முழம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யப்படாத

ஆவணம் என்றால் ஆமாம். வழக்கு சொத்தை நான் வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்தின் கீழ் தான் உரிமை கோருகிறேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் அய்யா கவுண்டருக்கு அந்த சொத்துக்கள் எப்படி வந்தது என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணம் தாவா 2 வது அயிட்ட சொத்திற்கான கிரய பத்திரம் அதில் என் தகப்பனாருக்கு விற்பனை செய்தவருக்கு அந்த சொத்து எப்படி வந்தது என்று எழுதவில்லை. வழக்கு சொத்தின் பழைய புல எண்.755/1, புதிய புல எண்.981 ஆகும்.

வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு என்னுடைய ஆட்சேபணையை நான் படித்து பார்த்துவிட்டு தான் தாக்கல் செய்தேன். ஆணையர் அவரது அறிக்கையில் என்னுடைய சொத்து 755/1 என்ற புல எண்ணில் உள்ளதாக காட்டியுள்ளார். புதிய புல எண்.981. என் தகப்பனாரும், 1 ம் பிரதிவாதி சின்னகுட்டியும் ஒரு சமரசம் செய்து கொண்டதாக நான் வழக்குரையிலும், வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றும், அதற்கான ஆவணங்களை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அப்படி நான் எதுவும் சொல்லவில்லை, அப்படி எதுவும் எழுதி இருந்தால் அது தவறு, அது நான் சொல்லி எழுதவில்லை. என்னுடைய திருத்தல் பிராதில் உள்ள படி தென்வடல் 24 முழம் கிழமேல் 23 முழம் ஆக்கரமிப்பு உள்ளது என சொல்லியுள்ளதற்கு நான் மீண்டும் வழக்கறிஞர் ஆணையரை வழக்கு சொத்தை அளவீடு செய்ய அழைத்து சென்றேனா என்றால் இல்லை. அதேபோல் ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த ஆணையர் அறிக்கையை நீக்கரவு செய்ய கேட்டு நான் மனு எதுவும் கொடுத்தேனா என்றால் நினைவில்லை.

வா.சா.ஆ.3 மாதிரி வரைபடத்தில் பிரச்சனைக்குரிய சந்தின் கிழமேல் தென்வடல் அளவு சொல்லவில்லை என்றால் ஆமாம். 2 வது அயிட்ட சொத்தில் உள்ள ஆக்கரமிப்பு கட்டுமானங்களை அகற்ற வேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் 1 வது அயிட்ட சொத்தில் உள்ள கட்டுமானங்களை அகற்ற வேண்டும் என்று தான் கேட்டுள்ளேன். வா.சா.ஆ-1 ஆவணம் ஒரு வருட காலத்திற்குள் பதிவு

செய்யப்பட வேண்டும் இல்லை என்றால் அது செல்லாத ஆவணம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எந்த தேதி, மாதம், வருடம் ஆக்கிரமிப்பு நடந்தது என்று நான் என் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணத்தில் புல எண் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்தில் பொதுவில் பாதி தான் எனக்கு பாத்தியம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அவ்வாறு எனில் கிழமேல் 30 முழம் அளவில் எனக்கு 15 முழம் தான் பாத்தியம் என்றால் ஆமாம். அதேபோல் மொத்த 30 X 20 முழத்தில் எங்களுக்கு பாதி தான் பாத்தியம் என்றால் ஆமாம், அந்த சங்கதி எனது வழக்குரை சொத்து விவரத்திலும், வழக்கிலும் நான் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

வா.சா.ஆ.2 ஆவணம் காளிகோணார், அய்யா கவுண்டருக்கு எழுதி கொடுக்கப்பட்டது இதுவரை நாங்கள் காளிகோணாருடன் பாகம் பிரித்து எழுதி கொள்ளவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ-1 ல் உள்ள சொத்து விவரத்திற்கும், வழக்குரையின் 1 வது அயிட்ட சொத்து விவரத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் எனக்கு அது தெரியவில்லை. என்னுடைய ஆணையர் அறிக்கைக்கான ஆட்சேபணைக்கு மேற்படி சொத்து மேற்கு தெருவில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி சொத்திற்கான எந்த வருவாய் துறை ஆவணமும் நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில் எனக்கு மட்டும் தான் பாகம் உள்ளதாக நான் சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம், அதன் பின்னிட்டு எனது வழக்கறிஞர் மூலம் எனது சகோதரிகளையும் இந்த வழக்கில் சேர்த்து இந்த வழக்குரையை திருத்தி உள்ளேன். வழக்கு சொத்தில் 2, 3 வாதிகள் ஒருபோதும் சுவாதீனத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல.

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த புகைப்படத்தில் 1 வது நம்பரை மேற்கூரைக்கும், தரைதளத்திற்கும் இடையே சுவர் இல்லை என்றால் ஆமாம். இந்த வழக்கின் 2 ம் பிரதிவாதி கடந்த 2024 ல் இந்த இடைப்பட்ட பகுதியில் நான் சுவரை எழுப்ப முயற்சி செய்தததாக என் மீது காவல் துறையில் புகார் கொடுத்தார்

என்றால் ஆமாம். தற்போது அந்த சுவர் என் மருமகள், மற்றும் உறவினர்கள் முன்னிலையில் வைக்கப்பட்டுவிட்டது என்றால் ஆமாம். சர்வேயர் அளவீடு செய்தபோது எங்களுக்கு அங்கு சொத்து இல்லை என்று சர்வேயர் சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. நான் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்று கேட்டுள்ளது நான் குறிப்பிடும் சுவர் தான் என்றால் ஆமாம், அந்த சுவர் மற்றும் மொத்த காம்பவுண்ட் சுவற்றை எடுக்க வேண்டும்.

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/மருதக்குட்டி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur